**பெருநகர சென்னை மாநகராட்சி**
**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண். 28** **நாள்: 13.01.2026**

**மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சரும், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள், திரு.வி.க.நகர் மண்டலம், வார்டு-76, செல்லப்பா முதலி தெருவில் ரூ.4.58 கோடி மதிப்பீட்டில் சென்னை தொடக்கப் பள்ளியில் புதிய பள்ளிக் கட்டடம் கட்டுவதற்கான பணிகளை அடிக்கல் நாட்டித் தொடங்கி வைத்தார்.**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் நல்வழிகாட்டுதலின்படி, இன்று (13.01.2026) மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சரும், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள், பெருநகர சென்னை மாநகராட்சி, திரு.வி.க.நகர் மண்டலம், வார்டு-76, ஓட்டேரி, செல்லப்பா முதலி தெருவில், பெருநகர சென்னை மாநகராட்சி சார்பில், சென்னை தொடக்கப் பள்ளியில் புதிய பள்ளிக் கட்டடம் கட்டுவதற்கான பணிகளை அடிக்கல் நாட்டித் தொடங்கி வைத்தார்.

இன்று மாண்புமிகு இந்து சமயம் அறநிலையத்துறை அமைச்சர் அவர்கள், செல்லப்பா முதலி தெருவில், சென்னை தொடக்கப் பள்ளியின் புதிய பள்ளிக் கட்டடம் கட்டுவதற்கான பணிகளை அடிக்கல் நாட்டித் தொடங்கி வைத்தார். இந்த புதிய தொடக்கப்பள்ளி கட்டிடம் மாநகராட்சியின் மூலதன நிதியின் கீழ், ரூபாய் 4.58 கோடி மதிப்பீட்டில், 4,150 சதுர அடி பரப்பளவில் கட்டப்படவுள்ளது. இதில் தரை தளம், முதல் தளம், இரண்டாம் தளத்துடன் 15 வகுப்பறைகள், கணிப்பொறி ஆய்வகம், சமையலறை, சேமிப்பு கிடங்கு, கழிவறைகள் உள்ளிட்ட பல்வேறு வசதிகளுடன் அமைக்கப்படவுள்ளது. இப்பணிகளை குறித்த காலத்திற்குள் முடித்திட ஒப்பந்ததாரருக்கும், மாநகராட்சி அலுவலர்களுக்கும் உத்தரவிட்டார்.

இதனைத் தொடர்ந்து, மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் அவர்கள், மாண்புமிகு மேயர் அவர்கள் தலைமையில், திரு.வி.க.நகர் மண்டலம், வார்டு-74, கிருஷ்ணதாஸ் சாலையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் திருநங்கைகள் மற்றும் 250 வாகன

ஓட்டுநர்களுக்கு உட்பட 650 நபர்களுக்கு சமத்துவ பொங்கல் பரிசுத் தொகுப்பினை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு மேயர் திருமதி ஆர்.பிரியா, திரு.வி.க.நகர் சட்டமன்ற உறுப்பினர் திரு.தாயகம் கவி, மத்திய வட்டார துணை ஆணையாளர் திரு.எச்.ஆர்.கௌஷிக், இ.ஆ.ப., மாமன்ற உறுப்பினர் திருமதி எஸ். தமிழ்செல்வி மற்றும் அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி.**